**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>O.S.No.246/2021</u>**

| | |
|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | **பி.சா. 4** |
| பெயர் | திரு. அருள் |
| தந்தை பெயர் | திரு. பாண்டுரங்கன் |
| கிராமம் | குளவிமேடு |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | விவசாயம், பைனான்ஸ் – மேனேஜர் |
| வயது | 53 |

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் குளவிமேடு கிராமத்தில் வசிக்கிறேன். பைனான்ஸ் நிறுவனத்தில் மேனேஜராவும், விவசாய தொழிலும் செய்கிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் ஆஜராகி யாருடைய தூண்டுதல் மற்றும் வற்புறுத்துதலின்றி தன்னிச்சையாக சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு குளவிமேடு சொந்த ஊர். நான் ரிசிட் பைனான்ஸ், செய்யாறு கிளையில் 10 வருடங்களாக பணிபுரிகிறேன், மேனேஜராக உள்ளேன், பங்குதாரர் இல்லை.

2. எங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். எங்கள் நிறுவனம் பங்குதாரர் நிறுவனம் ஆகும். சிவராமன், திவ்யா ஆகியோர் நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஆவார்கள். மேற்படி இருவரும் எனக்கு உறவினர்

இல்லை. சிவராமன், திவ்யா ஆகியோர் கணவன் மனைவி ஆவார்கள். இவ்வழக்கின் பிரதிவாதி ராஜேந்திரன், அவரது மனைவி முனியம்மாள், அவரது மகன் ராமகிருஷ்ணன், ராமகிருஷ்ணனின் மனைவி சுகன்யா இவர்களை தெரியுமா என்றால் நேரில் பார்த்தால்தான் சொல்ல முடியும். ராமகிருஷ்ணன் துபாயில் பணிபுரிகிறார் என்றால் அவரை பற்றி எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணன் எனது நண்பர் என்று சொன்னால் இல்லை. ராமகிருஷ்ணன் என் மூலமாக ரிசிட் பைனான்ஸில் கடன் வாங்கியிருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரிந்த வரையில் வாங்கவில்லை.

3. எனக்கு 04.06.2021-ல் முனியம்மாள் என்பவர் பி.சா.ஆ.7 பதில் அறிவிப்பு அனுப்பி அந்த அறிவிப்பின் நகலினை எனக்கு அனுப்பியிருந்தார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை, ஆனால் என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.9 அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பதில் அறிவிப்பை எனக்கு அனுப்பியிருந்தால் நான் கண்டிப்பாக படித்து பார்த்திருப்பேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.7 பதில் அறிவிப்பில் ராமகிருஷ்ணன் என் மூலமாக ரூ.50 லட்சம் கடன் கேட்டதாக வாசகம் கண்டு உள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் அவர் என்னிடம் கடன் கேட்கவில்லை, அவர் மனைவி பெயரில் உள்ள சொத்தினை விற்பனை செய்து அதன் மூலாக பணம் கொடுக்குமாறு கேட்டார்.

4. தற்போது இராமகிருஷ்ணன் யார் என்பது நினைவிற்கு வந்துவிட்டது. இராமகிருஷ்ணனின் தகப்பனார் ராஜேந்திரன், தாயார் முனியம்மாள் என்றால் அது எனக்கு தெரியாது. ரிசிட் பைனான்ஸில் இராமகிரஷ்ணனை நான்தான் அறிமுகப்படுத்தினேன் என்றால் சரிதான். சுகன்யா எங்கள் நிறுவனத்தின்பேரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். இராமகிருண்னின் தாயார் முனியம்மாளும் ஒரு கிரைய ஒப்பத்தம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் அது

எனக்கு தெரியாது. இது சம்மந்தமாகத்தான் எனக்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் அனுப்பியிருக்கலாம். அந்த பதில் அறிவிப்பினை பெற்றுக்கொண்டு நான் அதற்கு மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பு எதுவும் கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்ததுபோல் ஞாபகமில்லை.

5. ரிசிட் பைனான்ஸில் யாருக்கு பணம் கொடுத்தாலும், நாங்கள் அவர்களிடம் கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கும் பழக்கம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த வகையில், இராமகிருஷ்ணனின் மனைவி சுகன்யாவிடம் கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த வகையில், இராமகிருஷ்ணனின் தாயாரிடமும், தந்தை ராஜேந்திரன் என்பவரிடமும் கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த வகையில், இராமகிருஷ்ணன் அவர்கள் மனைவி மூலமாக எங்கள் நிறுவனத்திற்கு ரூ.50 லட்சம் வங்கி பரிவர்த்தனையாக அனுப்பி வைத்துள்ளது என்று சொனனால் சரியல்ல. மேற்படி மூவருக்கும் சொத்தினை கிரையம் செய்து கொடுக்க வேண்டிய எண்ணம் இல்லை என்றால் சரியல்ல.

6. முழுக்க முழுக்க நான் சொன்ன நம்பிக்கையின்பேரில் மேற்படி மூவரும் ஆவணம் எழுதிக்கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சுகண்யா எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் ஏதோ ஒரு காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டது. சுகண்யா பெயரில் வாங்கிய கடன் பைசல் செய்யப்பட்டதால்தான் அதனை ரத்து செய்து கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் ரிசிட் பைனான்ஸ் பரிந்துரை செய்யும் கால்த்தில், 18 சதவீதம் வட்டி என்று குறிப்பிட்டுதான் பணம் வாங்கி கொடுப்பேன் என்றாலும், தற்போது வாதி அதிக வட்டி கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

7. பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் செலுத்திய தொகையினை பற்றிய விஷயம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், மேற்படி விஷயங்களை

தெரிந்துகொண்டு தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ரிசிட் பைனான்ஸ் நிறுவனத்தில் நானும் ஒரு பங்குதாரர் என்றாலும், நானும் உடன் இருந்து மோசடி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு பற்றிய விஷயங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கு பற்றி தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு சம்மந்தமான விஷயத்திற்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை. எங்கள் நிறுவனத்தில் கடன் கொடுத்தால் கடனாகவும், விற்பனை செய்தால் விற்பனையாகவும் ஏற்படுத்துவது வழக்கம் என்று சொன்னால் சரிதான்.

ஒம்/- அருள்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.08.10 13:55:32 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**